Written by இந்துமதி
Friday, 25 January 2013 06:27 - Last Updated Friday, 25 January 2013 06:30

இத்தனை சிறிய கண்டுதான்
அத்தனை பெரிய பிரபஞ்சத்தின்
'அகலமே' என்பது
இவர்களின் நிஜம் !

சுரியன் அடைபட்டால் தான்
இரவென்பதல்ல ...,
வீட்டுக்கதவு அடைக்கப்பட்டால் கூட
இவர்களது நாள்
இருளிற்கு நகர்கிறது !

இவர்களுக்கு உணவிடும்
வேளையில் ,
உலகத்தின் மற்றவர்களும்
உணவருந்துவார்கள் என்பது
இவர்களின் கணிப்பு !

தான் கீ ச்சிடும் சத்தம்
கேட்டு தான்
உலகமே விழித்துக்கொள்கிறது என்பதில்
இவர்களுக்கு பெருமிதம் !

தன் கூண்டதை தாண்டி
வீட்டில் வாழும்
எவருக்கும் தன்னுடலைப்போல
நிறங்களின் வண்ணகலவையில்லை என்பதில்
இவர்களுக்கு பரோனந்தம் !

தனினத்தவரைப் போலவே
மற்றவர்களுக்கும் இன்னும்
சுதந்திரம் கிடைக்கவில்லையோ
என்ற கற்பனையுலகம் தான்
இவர்களின் ஓரே ஆறுதல் !

தனக்கு விதிக்கப்பட்டுள்ள
அத்தனை சிறிய கூட்டுக்குள்ளும் கூட
அனதைத்துலக சந்தோஷத்தையும்
ரசித்து வாழும்
'இவர்கள் -இவகைளல்ல ' !!!